3 - باب كراهة صيام يوم الجمعة منفردا

## ஜும்மா நாளில் தனித்து நோன்பு வைக்க கூடாது

 عن أبي هريرة رضي الله عنه قال سمعت النبي صلى الله عليه وسلم يقول لا يصومن أحدكم يوم الجمعة إلا يوما قبله أو بعده

**அபூஹுரைரா (ரலி) - நபி (ஸல்) - உங்களில் எவரும் ஜும்மா தினத்தில் தனித்து நோன்பு வைக்க வேண்டாம் அதற்கு முன்னால் ஒரு நாளோ அல்லது பின்னால் ஒரு நாளோ சேர்க்காமல் (புஹாரி, முஸ்லீம்)**

 عن جويرية بنت الحارث رضي الله عنها أن النبي صلى الله عليه وسلم دخل عليها يوم الجمعة وهي صائمة فقال أصمت أمس قالت لا قال تريدين أن تصومي غدا قالت لا قال فأفطري

**ஜுவைரியா பின்த் ஹாரிஸ் (ரலி) - ஜும்மா தினத்தில் அவர்களிடம் நோன்பாளியாக வந்தபோது நேற்றைய தினம் நீங்கள் நோன்பு வைத்தீர்களா என்று நபி (ஸல்) கேட்டார்கள் அவர்கள் இல்லை என்றதும் நாளை நோன்பு வைக்க நினைக்கிறீர்களா? என்று நபி (ஸல்) கேட்டார்கள் அப்போது இல்லை என்றபோது நபி (ஸல்) அவர்கள் அவ்வாறாயின் நீங்கள் நோன்பை விட்டுவிடுங்கள் என்றார்கள்.**

4 - باب صوم يوم عاشوراء

## ஆஷூரா தினத்தில் நோன்பு வைத்தல்

 عن عائشة قالت : كان يوم عاشوراء يوما تصومه قريش في الجاهلية ، وكان رسول الله - صلى الله عليه وسلم - يصومه في الجاهلية ، فلما قدم رسول الله - صلى الله عليه وسلم - صامه وأمر بصيامه ، فلما فرض رمضان كان هو الفريضة وترك يوم عاشوراء ، فمن شاء صامه ، ومن شاء تركه .

**ஆயிஷா (ரலி) - ஆஷூரா நோன்பை ஜாஹிலிய்யா மக்கள் நோற்கக்கூடியவர்களாக இருந்தார்கள். நபி (ஸல்) அவர்களும் அந்த காலத்தில் நோற்பவர்களாக இருந்தார்கள். நபி (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு வந்ததற்கு பிறகு அவர்கள் அந்த நோன்பை நோற்றதுடன் மக்களையும் நோற்க ஏவினார்கள். ரமழான் நோன்பு கடமையாக்கப்பட்டதுடன் ஆஷூரா நோன்பை விரும்பியவர்கள் பிடிப்பார்கள் விரும்பியவர்கள் விட்டு விடுவார்கள் (புஹாரி, முஸ்லீம்)**

عن أبي موسى رضي الله عنه قال كان يوم عاشوراء تعده اليهود عيدا قال النبي صلى الله عليه وسلم فصوموه أنتم

**அபூ மூஸா அல் அஷ்அரீ (ரலி) - ஆஷூரா தினத்தை யஹூதிகள் பெருநாளாக கொண்டாடி வந்தார்கள். நீங்கள் அந்த நாளில் நோன்பு வையுங்கள் என நபி (ஸல்) கூறினார்கள்**

 أَنَّهُ سَمِعَ أَبَا غَطَفَانَ بْنَ طَرِيفٍ الْمُرِّيَّ ، يَقُولُ : سَمِعْتُ عَبْدَ اللَّهِ بْنَ عَبَّاسٍ رَضِيَ اللَّهُ عَنْهُمَا ، يَقُولُ : حِينَ صَامَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ يَوْمَ عَاشُورَاءَ وَأَمَرَ بِصِيَامِهِ ، قَالُوا : يَا رَسُولَ اللَّهِ ، إِنَّهُ يَوْمٌ تُعَظِّمُهُ الْيَهُودُ وَالنَّصَارَى ، فَقَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ : " فَإِذَا كَانَ الْعَامُ الْمُقْبِلُ إِنْ شَاءَ اللَّهُ ، صُمْنَا الْيَوْمَ التَّاسِعَ " ، قَالَ : فَلَمْ يَأْتِ الْعَامُ الْمُقْبِلُ ، حَتَّى تُوُفِّيَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ

**அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) கூற நான் கேட்டேன் - நபி (ஸல்) அவர்கள் ஆஷூரா நோன்பு நோற்று அந்த நோன்பை பிடிக்குமாறு**

**கட்டளையிட்டபோது, யா ரசூலுல்லாஹ் இது யூத கிறிஸ்தவர்கள் கண்ணியப்படுத்தும் நாளாயிற்றே என்று கேட்டபொழுது நபி (ஸல்) - அடுத்த வருடம் நான் உயிருடன் இருந்தால் 9 ஆம் நாளில் நோன்பு வைப்போம் என்று கூறினார்கள். அடுத்தவருடம் வரும் முன் நபி (ஸல்) அவர்கள் மரணித்து விட்டார்கள்.**

عن أبي قتادة أن النبي صلى الله عليه وسلم قال صيام يوم عاشوراء إني أحتسب على الله أن يكفر السنة التي قبله

**அபூ கத்தாதா (ரலி) - நபி (ஸல்) - ஆஷூரா தினத்தில் நோன்பு வைத்தல் அந்த வருடத்திற்கு முந்திய வருடத்தின் பாவங்களுக்கு பரிகாரமாக அல்லாஹ் ஆக்க வேண்டும் என்று நான் எதிர்பார்க்கிறேன் (திர்மிதி - 752)**

5 - باب ثلاثة ايام من كل شهر وغيرها

## ஒவ்வொரு மாதத்திலும் 3 நாட்கள் நோன்பு வைத்தல்

حدثتني معاذة العدوية أنها سألت عائشة زوج النبي صلى الله عليه وسلم أكان رسول الله صلى الله عليه وسلم يصوم من كل شهر ثلاثة أيام قالت نعم فقلت لها من أي أيام الشهر كان يصوم قالت لم يكن يبالي من أي أيام الشهر يصوم

**முஆதா அல் அதவிய்யா என்ற பெண்மணி ஆயிஷா (ரலி) விடம் கேட்டார்கள் - நபி (ஸல்) அவர்கள் ஒவ்வொரு மாதத்திலும் 3 நாட்கள் நோன்பு வைப்பார்களா? என்று. அதற்கு ஆயிஷா (ரலி) ஆம் என்றார்கள். எந்த நாட்களில் அந்த 3 நோன்பை வைப்பார்கள் என கேட்டபோது ஆயிஷா (ரலி) எந்த நாளில் வைப்பதென்பதில் நபி (ஸல்) கவனமெடுப்பதில்லை. (முஸ்லீம் - ஆதாரப்பூர்வமானது)**

عن هنيدة بن خالد عن امرأته عن بعض أزواج النبي صلى الله عليه وسلم قالت كان رسول الله صلى الله عليه وسلم يصوم تسع ذي الحجة ويوم عاشوراء وثلاثة أيام من كل شهر أول اثنين من الشهر والخميس

**ஹுனைதா இப்னு ஹாலித் தன் மனைவி மூலமாக அறிவிக்கிறார் - நபி (ஸல்) அவர்களின் சில மனைவிமார்கள் மூலமாக அவரது மனைவி அறிவித்தார்கள் - நபி (ஸல்) அவர்கள் துல் ஹிஜ்ஜா மாதத்தின் 9 வது நாளில் நபி (ஸல்) அவர்கள் நோன்பு வைக்கக்கூடியவர்களாக இருந்தார்கள், ஆஷூரா தினத்திலும் நபி (ஸல்) அவர்கள் நோன்பு வைக்கக்கூடியவர்களாக இருந்தார்கள், மாதத்தில் 3 நாட்கள் நோன்பு வைக்கக்கூடியவர்களாக இருந்தார்கள். மாதத்தில் முதல் திங்களும் அதற்கு பின் வரக்கூடிய வியாழனும் நோன்பு வைக்கக்கூடியவர்களாக இருந்தார்கள். (அபூதாவூத் - 2437)**

( وعن أبي ذر قال : قال رسول الله صلى الله عليه وسلم : { من صام من كل شهر ثلاثة أيام فذلك صيام الدهر ، فأنزل الله تصديق ذلك في كتابه { من جاء بالحسنة فله عشر أمثالها } اليوم بعشرة

**அபூதர் அல் கிஃபாரீ (ரலி) - நபி (ஸல்) - யார் ஒவ்வொரு மாதத்திலும் 3 நாட்கள் நோன்பு பிடிக்கிறார்களோ அவர்கள் அந்த வருடம் முழுவதும் நோன்பு பிடித்ததற்கு சமமாகும். அல்லாஹ் குர்ஆனில் கூறுகிறான்.**

**ஸூரத்துல் அன்ஆம் 6:160**

مَنْ جَآءَ بِالْحَسَنَةِ فَلَهٗ عَشْرُ اَمْثَالِهَا

**எவர் ஒருவர் (ஒரு) நன்மையைச் செய்கிறாரோ அவருக்கு அதுபோல் பத்துப் பங்கு (நன்மை) உண்டு.**

**☆ஆகவே ஒரு நாள் 10 நாட்களுக்கு சமம் (திர்மிதி)**

روى أبو ذر ، قال : قال رسول الله صلى الله عليه وسلم : { يا أبا ذر ، إذا صمت من الشهر فصم ثلاث عشرة ، وأربع عشرة ، وخمس عشرة

**அபூதர் அல் கிஃபாரீ (ரலி) - நபி (ஸல்) அவர்கள் என்னிடம் அபூ தர்ரே ஒரு மாதத்தில் நீங்கள் நோன்பு வைப்பதாக இருந்தால் 13,14,15 ஆவது நாட்களில் நீங்கள் நோன்பு வையுங்கள்.**

**☆மாதத்தின் 13,14,15 இல் நோன்பு பிடிப்பது சம்மந்தமான செய்திகள் அனைத்தும் முழுமையான ஆதாரபூர்வமான தரத்தில் இல்லை என்பதை புரிந்து கொள்ள முடிகின்றது.**

6 - باب فضل الصيام في سبيل الله

## அல்லாஹ்வுடைய பாதையில் நோன்பு வைப்பதன் சிறப்பு

عَنْ أَبِي سَعِيدٍ الْخُدْرِيِّ رضي الله عنه قَالَ : قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم : مَنْ صَامَ يَوْماً فِي سَبِيلِ اللَّهِ بَعَّدَ اللَّهُ وَجْهَهُ عَنْ النَّارِ سَبْعِينَ خَرِيفًا

**அபூ சயீத் அல் ஹுத்ரீ (ரலி) - நபி (ஸல்) கூற நான் கேட்டேன் - அல்லாஹ்வுடைய பாதையில் யார் ஒரு நாள் நோன்பு வைக்கிறாரோ அவருடைய முகத்தை 70 இலையுதிர் காலம் தூரம்(70 வருடம் தூரம்) நரகத்தை விட்டு தூரமாக்கி விடுவான்.**

**☆في سبيل الله என்ற தலைப்பு ஜிஹாதை குறிக்கும்.**

7 - باب استحباب صوم ستة ايام من شوال

## ஷவ்வாலின் 6 நோன்பு நோற்றல்

عن أبي أيوب الأنصاري رضي الله عنه أنه حدثه أن رسول الله صلى الله عليه وسلم قال من صام رمضان ثم أتبعه ستا من شوال كان كصيام الدهر

**அபீ அய்யூப் அல் அன்சாரி (ரலி) - யார் ரமழானில் நோன்பு வைத்து மேலும் ஷவ்வாலில் 6 நோன்பு நோற்கிறாரோ அவர் காலம் முழுவதும் நோன்பு நோற்ற நன்மையை பெறுவார். (முஸ்லீம்)**

8 - باب فضل الصوم في المحرم

## முஹர்ரம் மாதத்தில் நோன்பு பிடிப்பதன் சிறப்பு

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ : قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ : " أَفْضَلُ الصِّيَامِ بَعْدَ رَمَضَانَ شَهْرُ اللَّهِ الْمُحَرَّمُ ، وَأَفْضَلُ الصَّلَاةِ بَعْدَ الْفَرِيضَةِ صَلَاةُ اللَّيْلِ "

**அபூஹுரைரா (ரலி) - நபி (ஸல்) - ரமழானுக்கு பின்னால் மிகச்சிறந்த நோன்பு அல்லாஹ்வின் மாதமான முஹர்ரத்தில் உள்ள நோன்பாகும். கடமையான தொழுகைக்கு பின்னர் மிகச்சிறந்த தொழுகை இரவு தொழுகையாகும் (முஸ்லீம்)**

9 - باب نية الصوم من النهار و جواز الفطر فى النافلة

## பகலில் நோன்பு வைக்க நிய்யத் வைத்தல் மேலும் நோன்பை விடுதல் - நபீலான நோன்புகளில்

 عن عائشة أم المؤمنين رضي الله عنها قالت قال لي رسول الله صلى الله عليه وسلم ذات يوم يا عائشة هل عندكم شيء قالت فقلت يا رسول الله ما عندنا شيء قال فإني صائم قالت فخرج رسول الله صلى الله عليه وسلم فأهديت لنا هدية أو جاءنا زور قالت فلما رجع رسول الله صلى الله عليه وسلم قلت يا رسول الله أهديت لنا هدية أو جاءنا زور وقد خبأت لك شيئا قال ما هو قلت حيس قال هاتيه فجئت به فأكل ثم قال قد كنت أصبحت صائما

**ஆயிஷா (ரலி) - நபி (ஸல்) ஒரு முறை - ஆயிஷாவே உணவு ஏதாவது இருக்கிறதா என்று கேட்டார்கள் அப்போது நான் எதுவுமில்லை என்று கூறினேன். அப்போது அவர்கள் நான் இன்று நோன்பு நோற்றுக்கொள்கிறேன் என்று கூறி வெளியே சென்றார்கள். அதற்கு பிறகு எங்களுக்கு அன்பளிப்பு வந்தது அல்லது விருந்தாளிகள் வந்தார்கள். நபி (ஸல்) அவர்கள் திரும்பி வந்தபோது யா ரசூலுல்லாஹ் நமக்கு அன்பளிப்போ அல்லது விருந்தளியோ வந்தபோது இவற்றை தந்தார்கள் அதில் உங்களுக்கும் வைத்துள்ளேன் என்று கூறியபோது. அது என்னவென்று நபி (ஸல்) வினவினார்கள் அப்போது நான் ஹய்ஸ் (ஈத்தம்பழம், பால்கட்டி, நெய் - இதில் செய்த உணவு) என்றேன். அப்போது நபி (ஸல்) அதை கொண்டு வாருங்கள் என்றார்கள் நான் கொண்டுவந்தபோது அதை உண்டார்கள். பிறகு நான் காலை முதல் நோன்பாளியாக இருந்தேன் இப்போது முறித்துவிட்டேன் என்றார்கள்.**

**☆ விருந்தாளியா அல்லது அன்பளிப்பா என்பதில் அறிவிப்பாளருக்கு சிறிய குழப்பம் இருந்தது.**

**☆ சில அறிவிப்புகளில் - (வீட்டில் ஒன்றும் இல்லை) அவ்வாறாயின் நான் நோன்பாளியாக இருந்து கொள்கிறேன் என்று கூறியதாக வருகிறது.**

10 - باب الصائم يدعى لطعام فليقل انى صائم

## நோன்பாளி உணவருந்த அழைக்கப்பட்டால் தான் நோன்பாளி என்று கூறலாமா?

 وعن أبي هريرة - رضي الله عنه قال قال رسول الله - صلى الله عليه وسلم - إذا دعي أحدكم إلى طعام وهو صائم فليقل إني صائم

**அபூஹுரைரா (ரலி) - நபி (ஸல்) - உங்களிலொருவர் நோன்பாளியாக இருக்கும் நிலையில் உணவிற்காக அழைக்கப்பட்டால் நான் நோன்பாளி என்று அவர் சொல்லட்டும்**

11 - باب صوم عشر ذى الحجة وعرفة

## துல் ஹிஜ்ஜா வின் 10 நாட்களிலும் அரபா தினத்திலும் நோன்பு வைத்தல்

حَدِيثُ عَائِشَةَ قَالَتْ : " مَا رَأَيْتُ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم صَائِمًا فِي الْعَشْرِ قَطُّ "

**ஆயிஷா (ரலி) - நபி (ஸல்) அவர்களை துல் ஹிஜ்ஜா வின் 10 நாட்களும் நோன்பு வைத்ததை நான் கண்டதே இல்லை. (முஸ்லீம்)**

أبي قتادة أن النبي صلى الله عليه وسلم قال صيام يوم عرفة إني أحتسب على الله أن يكفر السنة التي قبله والسنة التي بعده

**அபூ கத்தாதா (ரலி) - நபி (ஸல்) - அரஃபா தின நோன்பு நோற்பதன் மூலம் அதன் முந்தின வருட பாவத்தையும் பிந்திய வருடத்தின் பாவத்திற்கும் அல்லாஹ் பரிகாரமாக்கட்டும் என்று நான் அல்லாஹ்விடத்தில் எதிர்பார்க்கிறேன்(முஸ்லீம்)**

12 - باب الصوم في شعبان

## ஷஃபானில் நோன்பு வைத்தல்

سمع عائشة تقول كان أحب الشهور إلى رسول الله صلى الله عليه وسلم أن يصومه شعبان ثم يصله برمضان

**ஆயிஷா (ரலி) - நபி (ஸல்) அவர்களுக்கு மாதங்களில் நோன்பு பிடிக்க மிகவும் விருப்பமான மாதம் ஷஃபான் அதற்கு பின் ரமழான். (அபூதாவூத்)**

عَنْ أَبِي هُرَيْرَةَ رضي الله عنه أَنَّ رَسُولَ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ : ( إِذَا انْتَصَفَ شَعْبَانُ فَلا تَصُومُوا

**அபூஹுரைரா (ரலி) - நபி (ஸல்) - ஷஃபான் பாதியாகிவிட்டால் நோன்பு பிடிக்க வேண்டாம். (லயீஃப்)**

13 - باب في صوم الاثنين والخميس

## திங்கள் மற்றும் வியாழன் நோன்பு வைத்தல்

وعن عائشة رضي الله عنها قالت : ( كان النبي صلى الله عليه وسلم يتحرَّى صوم الاثنين والخميس

**ஆயிஷா (ரலி) - நபி (ஸல்) திங்கள் மற்றும் வியாழன் நோன்பு பிடிப்பதை விரும்பக்கூடியவர்களாக இருந்தார்கள் (திர்மிதி)**

عن أبي هريرة أن رسول الله صلى الله عليه وسلم قال تعرض الأعمال يوم الاثنين والخميس فأحب أن يعرض عملي وأنا صائم

**அபூஹுரைரா (ரலி) - நபி (ஸல்) - திங்கள் மற்றும் வியாழன் கிழமைகளில் நன்மைகள் அல்லாஹ்விடத்தில் காட்டப்படும் அப்போது நான் நோன்பாளியாக இருப்பதை நான் விரும்புகிறேன் (திர்மிதி)**

14 - باب من تطوع وعليه صوم واجب

## வாஜிபான நோன்பு இருக்கையில் சுன்னத்தான நோன்பு வைக்கலாமா?

عن سعيد بن المسيب أنه سئل عن رجل نذر صيام شهر هل له أن يتطوع فقال سعيد ليبدأ بالنذر قبل أن يتطوع وعن سليمان بن يسار مثل ذلك

**சயீத் இப்னு முஸய்யப் (ரஹ்) - ஒரு மாதம் நோன்பு வைக்க ஒருவர் நேர்ச்சை செய்திருக்கும் நிலையில் அவர் சுன்னத்தான நோன்பு வைக்கலாமா? என்று கேட்டபோது சயீத் (ரஹ்) கூறினார்கள் அவர் நேர்ச்சை நோன்பை ஆரம்பிக்கட்டும் சுன்னத்தான நோன்பை வைக்கும் முன்னர்.**

**சுலைமான் இப்னு யஸார் (ரஹ்) அவர்களும் அவ்வாறே கூறினார்கள்.**